# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : S.T.C. No.411/-2023**

**Prosecution witness : ம.சா.1** **Date : 12.08.2024**

| | |
|---|---|
| **Name : பரசுராமன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. நான் தற்போது என்ன தொழில் செய்கிறேன் என்றால் வீட்டில் ஒய்வில் உள்ளேன். எதிரி பாலன் அவர்களை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 10 வருடமாக தெரியும். எப்படி பழக்கம் என்றால் பாலன் எனக்கு போன் செய்து என்னிடம் fabrication வேலை உள்ளதாக சொன்னதின் பேரில் நான் போய் பார்த்தேன். boiler வேலை எனக்கு கொடுத்தார். அதற்கான material வாங்கவதற்குண்டான பணம் ரு.9,00,000 போட்டு நான் தான் செய்து முடித்தேன்.

2. பாலன் எனக்கு மேற்சொன்ன பணத்தை திருப்பி கொடுத்தரா என்றால் அதில் ரு.3,50,000 மட்டுமே கொடுத்தார். மீதி தொகை நிலுவையாக இருந்ததது. அதில் ரு.2,00,000 வரை கொடுத்தார். பிறகு நிலுவை தொகையினை கொடுக்கவில்லை. 10 வருடமாக பழக்கம் உள்ள நிலையில் ரு.9,00,000 த்திற்குண்டான ஒப்பந்த வேலை மட்டுமே செய்தேனா என்றால் ஆமாம். அப்போது என்ன வேலையில் இருந்தேன் என்றால் post man யாக வேலையில் கடந்த 2016 வரை இருந்தேன்.

3. பாலன் நான் postman யாக இருக்கும் பழக்கமா என்றால் ஆமாம். நான் எங்கு post man யாக இருந்தேன் என்றால் மேட்டுர் ஆர்எஸ் பகுதியில் இருந்தேன். பாலன் கோயம்புத்துரில் உள்ள நபர் எனக்கு எவ்வாறு பழக்கமாகும் என்றால் போன் முலமாக பழக்கமாகும். நான் postman யாக இருந்த காலத்தில் fabrication வேலை செய்யவில்லை என்றால் சரிதான். fabrication செய்யாத நபரான

என்னிடம் எவ்வாறு வேலை செய்ய சொன்னார் என்றால் கருமலை கூடல் பொறுத்த வரை ஆட்கள் நிறைய உள்ளதால் வேறு ஆட்களை வைத்து செய்து கொடுத்தேன்.

4. நான் தான் ஆட்களை வைத்து வேலை செய்துகொடுததேன் என்றால் சரிதான். நான் என்ன பெயரில் வைத்து வேலை செய்து கொடுத்தேன் என்றால் sindhu fabricators என்ற பெயரில் செய்து வந்தேன். நான் மட்டுமே sindhufabricators உரிமையாளர் என்றால் சரிதான். காசோலை 26.10.2018 ம் தேதியன்று வழங்கியுள்ள நிலையில் எப்போது பணம் கேட்டேன் என்றால் 2 மாதத்திற்கு முன்பாக கேட்டேன். காசோலை கொடுப்பதாக சொல்லும் நிலையில் எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டேன். என் முன்பாக காசோலையில் உள்ள சங்கதிகளை பூர்த்தி செய்து கொடுத்தரா என்றால் உள்ளே எதிரி சென்று அவரது மனைவியிடம் காசோலையில் அவரிடம் கையொப்பம் பெற்று பூர்த்தி வெளியே உட்கார வைத்திருந்த என்னிடம் கொடுத்தார்.

5. என்னிடம் காட்டபடும் காசோலையில் உள்ள எதிரி யின் மனைவியினுடையது என்றால் சரிதான். இது cross cheque என்றால் சரிதான். இதில் கையொப்பம் ஒரு மையினர், மற்ற விபரம் வேறு மையினால் உள்ளது என்றால் சரிதான். அந்த காசோலையில் எந்த வங்கி கிளையில் வசூலுக்கு போட்டேன் என்றால் indian bank sowripalayam branch ல் தாக்கல் செய்தேன்.

6. மேற்சொன்ன வங்கியில் எனக்கு கணக்கு உள்ளதா என்றால் இல்லை. எனக்கு கணக்கு இல்லாத நிலையில் என்ன காரணத்திற்காக தாக்கல் செய்தேன் என்றால் என்னுடைய வங்கி மேலாளர் இந்தியன் வங்கி மேலாளர் கையொப்பம் வித்தியாசமாக உள்ளதால் சவுரிபாளை கிளையில் பணம் உள்ளதால் தாக்கல் செய்தேன்.

7. காசோலை cross cheque என்பதால் எனக்கு கணக்கு உள்ள வங்கியில் மட்டுமே தாக்கல் செய்யமுடியும் என்றால் அவ்வாறு இல்லை. எதிரி மனைவி கீதா ஆகும்.

நேரமின்மை காரணமாக ஒத்தி வைக்கபட்டது.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.